சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. MCOP.73/2013**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25ம் நாள் புதன்கிழமை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய **எ.ம.சா.2-**இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின் படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜராஜேஸ்வரி | தொழில் | மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, ஆரணி. |
| கணவர் பெயர் | ஆனந்தன் | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 46 |

**25.02.2026 முதல் விசாரணை**

1. சாட்சிக்கு நீதிமன்றம் மூலம் அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் சாட்சி ஆஜர். இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு அளிக்கப்பட்ட அங்கீகார கடிதம் தாக்கல் செய்கிறேன். அந்த அங்கீகார கடிதம் **எ.ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்.இராமன் என்பவரின் ஓட்டுநர் உரிமத்திற்கான ஓட்டுநர் உரிம பதிவேடு சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஓட்டுநர் உரிம பதிவேட்டின் அடிப்படையில் ஓட்டுநர் உரிமம் எப்போது காலாவதி ஆனது என்று சொல்லமுடியாது. பொதுவாக ஒருவருக்கு ஓட்டுநர் உரிமம் 50வயது வரை அளிப்பார்கள் அல்லது 20 வருடம் வரை அளிப்பார்கள். இராமனுக்கு 04.04.1991ல் ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. அவருக்கான ஓட்டுநர் உரிமம் 03.04.2011 வரை Non Transport வாகனங்களை இயக்குவதற்கான உரிமம் இருந்தது. 01.11.2019 அன்று மீண்டும் Non Transport வாகனங்களை இயக்குவதற்கான உரிமத்தை புதுப்பித்து உள்ளார் என்றால் எங்களது அலுவலகத்தின் ஆவணத்தின் அடிப்படையில் அவ்வாறு தான் உள்ளது. இராமனுக்கு இருசக்கர வாகனம், இலகுரக வாகனம், கனரக வாகனம் ஓட்டுவதற்கு உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. விபத்து நடந்த 21.12.2012 அன்று Non Transport வாகனங்களை இயக்குவதற்கான உரிமம் நிலுவையில் இருந்ததா என்றால் முடிந்துவிட்டது. விபத்து நடந்த தேதியில் Non Transport வாகனங்களை இயக்குவதற்கான ஓட்டுநர் உரிமம் இராமனுக்கு இல்லை.

**குறுக்கு விசாரணை**

1. 01.11.2019 தேதிக்கு முன்னர் Non Transport வாகனங்களை இயக்குவதற்கான ஓட்டுநர் உரிமம் இராமனுக்கு உயிர்ப்புடன் இருந்ததா என்று நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.4ல் விவரம் இல்லை என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் இல்லை. 01.11.2019க்கு முன்னர் இராமனுக்கு Non Transport வாகனங்களை இயக்குவதற்கான உரிமம் எப்போது முடிவடைந்தது என்ற விவரம் நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.4ல் விவரம் இல்லை என்றால் சரிதான்.

2. விபத்து நடந்த சமயத்தில் 21.12.2012ம் தேதியில் இராமனுக்கு Non Transport வாகனங்களை இயக்குவதற்கான உரிமம் இருந்ததா என்ற விவரம் எங்கள் அலுவலக கணிணியில் ஏற்றம் செய்யப்படாத குறிப்பேடுகளை பார்த்தால் தான் சொல்ல முடியும் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>**

1. 2012ம் வருடத்தில் ஆரணியில் வட்டார போக்குவரத்து அலுவலகம் இருந்ததா என்றால் இருந்தது. 2012ம் வருடத்திற்கான ஓட்டுநர் உரிம பதிவேட்டை பார்வையிட்டால் இராமனுக்கு உரிமம் இருந்ததா என்று தெரிந்து கொள்ளலாம் என்றால் தெரிந்து கொள்ளலாம். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.6 ஓட்டுநர் உரிமம் உரிமத்தில் இராமனுக்கு 03.04.2011 வரை தான் Non Transport வாகனங்களை இயக்குவதற்கான உரிமம் உள்ளது என்றால் சரிதான். டிராக்டர் என்பது Non Transport வாகனம் என்றால் சரிதான்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.6 ஓட்டுநர் உரிமம் உரிமத்தில் இராமனுக்கு 15.07.2013 வரை Transport வாகனங்களை இயக்குவதற்கான உரிமம் உள்ளது என்றால் சரிதான். டிராக்டர் என்பது இலகுரக வாகனம் என்றால் சரிதான்.